

“தெய்வீக நீதி சிந்தனையால் சாத்தான் என்னைச் சோதித்தால், நான் கடவுளின் இரக்கத்தை நினைத்துக் கொள்வேன்; அவரது இரக்கச் சிந்தனையால் என்னை ஆட்கொள்ள விரும்பினால், அவரது நீதியை நினைத்துக் கொள்வேன்.”

– புனித லோயாலா இன்னாசியார்

‘ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள்’ நற்செய்திக்கூறும் வழியில் உன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். எனவே

- மனந்திறந்தல் – மன்னிப்பதில்
- தாராளம் – அன்பு காட்டுவதில்
- விடாப்பிடி – செபிப்பதில்

தியாகமும் இரக்கமும் தவறாக பயன்படுத்தப்பட்டால், கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தும். இரக்கத்தை நமக்கும், தியாகம் மற்றவர்க்கும் என நாம் பிரித்தால், மற்றவர்களைத் தீர்ப்பிட தயாராகிறோம். நமக்கு விதிவிலக்கு அளித்துக் கொள்கிறோம். நாம் தியாகம் செய்வது, இரக்கம் மற்றவர்க்கு என்ற முன்னுதாரணத்தை இயேசு நமக்குத் தந்துள்ளார். சுயநலம் பாராமல், முற்போக்குடன் முன்னேறுவோம்.

பயபக்தியாலும் அச்சத்தாலும் சமயச் சட்டங்களைப் பிடித்துக் கொள்ளும் குறுகிய–மனப்பான்மை உள்ளவர்களை திருத்தந்தை கண்டிருக்கிறார். பழையப் போக்கை கைவிட்டு, பிறருக்கு உதவிக்கரம் நல்க கத்தோலிக்கர்கள் முன்வர வேண்டும். திருச்சபையால் ஒதுக்கப்பட்டவர்களும் இதில் அடங்குவர் என திருத்தந்தை கூறியுள்ளார்.

இன்றைய சூழ்நிலையில், அவநம்பிக்கை ஏற்படுத்தும் சுவரைக் கட்டாமல், நம்பிக்கை அளிக்கும் பாலங்களைக் கட்டும் மக்களாக மாறுவோம். இதற்கு மன்னிப்பு அத்தியாவசியம். “ வினை விதைத்தவன் வினை அறுப்பான் ஸ” என நமது மனப்போக்கு மாற வேண்டும்.

தம்மை கொலை செய்தவரை, மரணத்தின் தருவாயில் மன்னித்த மரியா கொரத்தி செயல், அவளது நல்லப் பண்பையும் மன்னிக்கும் மனப்பான்மையையும் காட்டுகிறது. 1950ம் ஆண்டு புனிதர் ஆக்கப்பட்ட அவளது மன்னிக்கும் எண்ணம், கொலையாளியின் கல்மனதை மாற்றியது. அனைத்தும் இழந்த நிலையிலும் தொடர்ச்சியான செபம், மற்றொரு வாய்ப்பு வழங்குவது, இடைவிடாது மன்றாடுவது ஆகியவை நம்பிக்கையைக் கொண்டு வரும்.

நமது செபம் பலனளிக்காத போது மனச்சோர்வும் விரக்தியும் ஏற்படும் அனுபவம் நமக்குண்டு. கடவுள் நமது செபத்தைக் கேட்பார். “செபம் மந்திரக்கோல் அல்ல” என திருத்தந்தை குறிப்பிடுகிறார். ஆண்டவரது சித்தத்தை நாம் முழுமையாக புரிந்து கொள்ளா விட்டாலும், அவரை நம்பும் நமது விசுவாசத்தைக் காத்துநிற்க செபம் உதவுகிறது.

தந்தையுடனான உறவே செபம். “கடவுளின் சித்தம் எதுவாக இருந்தாலும், அதற்கேற்ப நமது விருப்பத்தை செபம் மாற்றுகிறது. ஏனெனில், பரிவன்புமிக்க இறைவனுடன் ஒன்றித்திருக்கவே ஒருவர் செபம் செய்கிறார்” என திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார். ✢

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWBEC

24 செப்டம்பர் 2017
பொது காலம்
25ம் ஞாயிறு



# நம்பிக்கைக்கு இட்டுச் செல்லும் இரக்கத்தை நாடுங்கள்




**மினவுதல் மாதா தேவாலயம்**

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்

தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542

தொ.நகல் : 06-767 7544

Email: : serembanvisitation@gmail.com

Website: www.visitationseremban.org

பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்

உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்


*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**

*2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*

*தன்னலத்தை மிஞ்சிய உருமாற்றத்தை அளிக்கிறது*

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30

**சனி :** காலை 8.30 - மாலை 7.30

**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00

(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 25ஆம் ஞாயிறு சனி 23-09-2017 ஞாயிறு 01-10-2017

எசாயா 55: 6 – 9 தி.பா 144: 2-3, 8-9, 8-9,10, 17-18 பிலிப் 1: 20c-24, 27a மத் 20: 1-16a

**தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், ஆண்டவர் அண்மையில் இருக்கிறார் ( சங் 144 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. பொஸ்கோ) | **குழந்தைகளுக்கான திருமுழுக்கு மாலை 7.00 மணி** |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி தமிழ் (பு. அந்தோனி, பு. பெட்ரிக்)<br>திருப்பலி ஆங்கிலம் (குடியேற்றவாசிகள்)<br>திருப்பலி சீனமொழி<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>**திருப்பலி (தே.மொ) நடைபெறாது** | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| | | | படைப்பிற்காக செபித்தல் - விசேட செபம் மாலை 6.00 மணி கிறிஸ்து ஒளி சிற்றாலயம், கம்.செபீர் | |
| திங்கள் | 25 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 26 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 27 | 6.45 கா | திருப்பலி | **மாலை 7.45 மணி அ.தி.ச ஒருங்கிணைப்புக் குழு ஒன்றுகூடல் (BECCOT)** |
| வியா | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 29 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 26ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

எசே 18: 25 – 28 தி.பா 24: 4bc -5, 6-7, 8-9, பிலிப் 2: 1-11 (1-5) மத் 21: 28-32

**ஆண்டவரே, உம் இரக்கத்தையும், பேரன்பையும் நினைத்தருளும் ( சங் 24 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. புருணோ 1) | |
| ஞாயிறு | 01 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் ()<br>திருப்பலி ஆங்கிலம் (பு. புருணோ 2)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1. **ஆலய காணிக்கை** 16/17 செப்டெம்பர் ரிம: 8,861.35

   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

2. **கவனத்தில் கொள்ளவும்:** வார நாட்களில் ஆலய உணவு விடுதிக்கு அருகில் உள்ள வாயிற் கதவு மற்றும் பிரதான நுழைவாயிலில் உள்ள வாயிற்கதவு பாதுகாப்பு காரணங் களுக்காக மூடப்பட்டிருக்கும். தயவுசெய்து ஆலய மண்டபத்திற்கு அருகிலுள்ள வாயிற்கதவை (Gate 2) பயன்படுத்தவும்

3. **கழிவறைகள் உபயோகத்திற்கு தயாராகிவிட்டது:** உணவு விடுதியிலுள்ளகழிவறைகள் புதுப்பிக்கப்பட்டு தயாராகி விட்டது. தயவு செய்து எப்போதும் சுத்தமாகவும் அக்கறையாகவும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- **நற்கருணை ஆராதனை மாநாடு 2017 & வத்திக்கான் அங்கீகரித்த உலகின் நற்கருணை அற்புதங்களின் கண்காட்சி**
  11 நவம்பர் 2017(சனிக்கிழமை) காலை 8.30 - மாலை 4.00 வரை பெட்டாலிங் ஜெயா - புனித இக்னேசியஸ் ஆலயத்தில் நடைபெறும். பதிவுகள் அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் நடைபெறும். தொடர்புக்கு: ஸ்பென்ஸர் (012- 2325 6718)

- **திருப்பலிக்கு முறையாக உடை உடுத்தி வருவோம். பெண்கள்:** முழங்கால் வரை உள்ள குட்டை கால்சட்டை, உடல் தெரியும்படி இருக்கும் கை இல்லாத சட்டைகள், ஜப்பான் காலணி ஆகியவற்றை உடுத்திவருவதை தவிர்க்கவும் **ஆண்கள்:** முழங்கால்வரை உள்ள குட்டை கால்சட்டை, உள்பனியன் மற்றும் ஜப்பான் காலணி ஆகியவற்றை உடுத்திவருவதை தவிர்க்கவும்

*மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.*

செலின் டி குரூஸ் - இறப்பு 17-09-2017

முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

- **குடியேற்றவாசிகளின் ஞாயிறு 24 செப்டம்பர் 2017**
  கருப்பொருள்: குழந்தை குடியேற்றவாசிகள்: பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் குரலெழுப்ப முடியாதவர்கள்
  **8.45 காலை:** ஆலய முகப்பில் குடியேற்றவாசிகளின் பிரதிநிதித்தல்
  **9.00 காலை** அனைத்து குடியேற்றவாசிகளும் கலந்துகொள்ளும் விசேச திருப்பலி (ஆங்/தேமொழி)
  **10.15காலை:** குடியேற்றவாசிகளின் வாழ்க்கையைப் பற்றிய கண்காட்சி. அனைவரும் வருக (ஆலய வளாகத்தில்)
  **11.30 காலை:** குடியேற்றவாசிகளுக்கு உணவு

- **அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்: 27 செப்டம்பர் 2017 இரவு 7.45 மணி:**
  i) பிற சமயத்தவரோடு உரையாடல் (IRD)
  ii) பங்கு மனித வள மேம்பாட்டுப்பணிக்குழு (அதன்கீழ் இயங்கும் 9 கிளைப் பணிக்குழுக்கள்)
  iii) அதிச (பொறுப்பாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்) iv) குடும்ப வாழ்வுப் பணிக்குழு
  v) ஒற்றுமை பணிக்குழு vi) சமூக தகவல் தொடர்புப் பணிக்குழு (மீடியா)
  vii) உருவாக்கப்பணிக்குழு ( வவிலியப் பணிக்குழுக்கள்) viii) இளைஞர் பணிக்குழு & வட்டாரப்பிரதிநிதிகள் அதிச ஊக்குவிக்கும் பணிக்குழு (BECCAT), மறைக்கல்வி மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் கத்தோலிக்க ஆசிரியர்கள்/திருவழிபாடு (அனைத்து மொழியினரும்) மேற்குறிப்பிட்ட அனைவரும் இதில் கட்டாயம் கலந்துகொள்வது அவசியம்

- **படைப்பிற்கான உலக செப நாள்:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுற்றுச்சூழலைப் பற்றி அக்கறை கொள்ள அழைக்கிறார் (செப்டமர் 1 முதல் அக்டோபர் 4 வரை) உலகெங்கும் உள்ள கிறிஸ்துவர்கள் படைப்பிற்காக செயலாற்றவும், செபிக்கவும் அழைக்கப்படுகிறோம். இணையத்தின்மூலம் செபிக்கவும், அடையாளப்படுத்தும் வகையில் உதவிடவும் http://seasonofcreation.org/online-events/ அகப்பக்கத்திற்கு செல்லுங்கள். (கம்போங் செபீரில் இதற்கான செபவழிபாடு நடைபெறும்)

- **அக்டோபர் மாதம் - செபமாலை மாதம்**; அனைத்து அதிச க்களும் தங்களுடைய இல்லங்களில் செபமாலை பக்திமுயற்சியை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். சோன் தலைவர்கள் உங்களுடைய வட்டாரத்தில் செபமாலை மற்றும் திருப்பலி அட்டவணையைக் கவனத்தில் கொள்ளவும். தொடர்புக்குள் ஜோன் மெய்னார்ட் (012- 6656 411)

- **செல்லப்பிராணிகளுக்காக விசேச ஆசீர் (புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா)** அக்டோபர் 8 (ஞாயிறு) மாலை 5.00 மணிக்கு மாதா கெபியின் முன் வழங்கப்படும்

- **பங்கு ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் (PCC)** செப் 26(செவ்)இரவு 8.00 மணி மினவுதல் தேவாலய மண்டபம். அனைத்துப்பணிக்குழுக்களின் பொறுப்பாளர்களின் வருகை கட்டாயம்

- **அருள்திரு ஜோர்ஜ்** அவர்கள் 29 செப் - 1 அக் வரை கத்தோலிக்க திருமணப் பயிற்சியை நடத்துவதால் (APC, கோலாலம்பூர்). பங்கில் இருக்க மாட்டார்.

- **அருள்திரு அண்ட் ரூ கூய்** குவாந்தானுக்கு அக் 3- 9 வரை செல்கிறார்.

- **பங்கு மேய்ப்புப்பணி பேரவை:** 15 அக்டோபர் (ஞாயிறு) பகல் 2.00 -5.00 வரை. மினவுதல் தேவாலய மண்டபத்தில் நடைபெறும்.

- **மறைக்கல்வி (தமிழ்) மணவர்களின் பெற்றோர்களின் கவனத்திற்கு : இன்று (24-09-2017)** மறைக்கல்வி மாதத்தை முன்னிட்டு அனைத்து மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரையும் வகுப்பிற்கு அழைக்கின்றோம். இதில் பங்கெடுப்பதன்மூலம், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் முறைகளையும் மாணவர்களின் புரிந்து கொள்ளுதல்களையும் தெரிந்துகொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.